# வழக்கின் தீர்ப்பு

**திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2010 (வேலூர்)**

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுக்கா வயலூர் அஞ்சல் பூங்குணம் கிராமத்தை சேர்ந்த விவசாயி திரு.இளங்கோவன் அவர்களின் மனைவி திருமதி.விஜயா உடல்நிலை சரியில்லாமல் 27.04.2010-ஆம் தேதி இறந்துவிட்டதாகவும், அவரது பெயரில் மழையூர் இந்தியன் வங்கியில் ரூ.27,000/-க்கு நகைக்கடன் வாங்கி இருப்பதாகவும் அதனை மீட்க வாரிசு சான்று தேவைப்படுவதால் 04.06.2010-ஆம் தேதி குடும்ப அட்டை மற்றும் இறப்புச்சான்றிதழ் நகல் ஆகியவற்றை இணைத்து விவசாயி திரு.இளங்கோவன் அவர்கள் பூங்குணம் கிராம நிர்வாக அலுவலர் திரு.சுப்பிரமணியன் அவர்களிடம் மனு அளித்துள்ளார். அதன்பேரில் வாரிசு சான்றிதழ் தர ஆட்சேபனை இல்லை என கையொப்பமிட கிராம நிர்வாக அலுவலர் ரூ.2,000/- இலஞ்சமாக கேட்டதாகவும், அவ்வளவு பணம் தர இயலாது என்று திரு.இளங்கோவன் கூறியதால், கிராம நிர்வாக அலுவலர் அதனை குறைத்து ரூ.1,250/- தருமாறு கேட்டுள்ளார். இருப்பினும் இலஞ்சம் கொடுத்து வாரிசு சான்றிதழ் பெற விருப்பம் இல்லாத விவசாயி திரு.இளங்கோவன் அவர்கள் 02.08.20210-ஆம் தேதி வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன்பேரில் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவினர் வழக்கு பதிவு செய்து பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்டு பூங்குணம் கிராம நிர்வாக அலுவலர் திரு.சுப்பிரமணின் அவர்களை இலஞ்சப்பணம் பெறும் கையும் களவுமாக பிடித்து கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் விவசாயியான திரு.இளங்கோவன் தனது மனைவி திருமதி.விஜயா இறந்து மிகவும் மனவேதனை அடைந்த நிலையில் அவரிடம் வாரிசு சான்றிதழுக்கு தடையில்லா சான்றளிக்க இலஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் திரு.சுப்பிரமணின் அவர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டதால் திருவண்ணாமலை முதன்மை குற்றவியல் நீதிமன்றம் 30.09.2022-ம் தேதி ஒரு வருட கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் அபராதம் ரூ.4,000/- விதித்து தீர்ப்பளித்துள்ளது.